# தமிழ்த்துறைச் செய்திமடல்




நெற்களஞ்சியமாம் தஞ்சையின் கல்விக் களஞ்சியம் பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி 2002 ஆம் ஆண்டு முதல் கல்விக்காக துவங்கி, கலை, ஒழுக்கம், பண்புகளில் சிறந்து விளங்க மாணவிகளுக்கு நல்லதொரு வாய்ப்பை வழங்கி வருகிறது. கேடில் விழுச்செல்வமாம் கல்வி, செல்லும் இடமெல்லாம் சிறப்பு தரும். திருடர்களால் திருடமுடியாத, நெருப்பினால் எரிக்க முடியாத, குறைவுபடாத சிறப்பு வாய்ந்தது. கல்வியானது கற்பிக்க கற்பிக்க பெருகிக்கொண்டே செல்லுமன்றி ஒருபோதும் குறையாதது. அத்தகைய கல்விச்சேவையால் அருகு போல் வேரூன்றி இன்று ஆல்போல் தழைத்து செம்மாந்து செயலாற்றி வருகின்றது பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி.

## தமிழ்த்துறை - நோக்கம், செயல்பாடு

### தமிழ்த்துறை



### நோக்கம்

தாய்மொழியின் சிறப்புகளை அறியவைத்து தமிழ் உணர்வையூட்டி, புதிய தகவல்கள் மூலம் பாடத்திட்டம் சாராத நூல்களை படிக்க வைத்து தமிழர்களின் கலை, பண்பாட்டு வரலாற்றினை அறியச் செய்தல். மாணவிகளின் ஆளுமைப்பண்பை வளர்க்க தனித்திறன் மேம்பாட்டிற்கும் வழிவகை செய்தல்.

### செயல்பாடு

"நறுவீ தமிழ்ச்சங்கம்" இலக்கிய மன்றத்தின் கீழ் தமிழ்த்துறை ஒன்பது பேராசிரியர்களோடு செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் கருத்தரங்குகள், தமிழ் கலை விழாக்கள், சொற்பொழிவுகள், முத்தமிழ் விழா, மன்றத்தேர்வு, மாணவர்களின் கவித்திறனையும், படைப்பாற்றலையும் வெளிக்கொணரும் விதமாக கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி, வழக்காடுமன்றம் என பல்வேறு வகையான போட்டிகள், நடத்தப்பெறுகின்றன. எமது துறையின் மாபெரும் வளர்ச்சிக்கு உறுதுணையான நிகழ்வுகளைச் செய்திமடலாக வெளியிடுகிறோம்.

1. திறனறிப்போட்டி

முதலாமாண்டு மாணவியர்களின் பல்வேறு திறமைகளை அறிந்துகொள்ளும் விதமாக மாணவிகளுக்கு கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டி, பட்டிமன்றம் ஆகிய திறன் அறியும் போட்டிகள் நடைபெற்றன.

2. BON FEST – 2016

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் கலைவிழாவில் பங்கேற்று வெற்றிபெற ஊக்கப்படுத்தும் நோக்கில் கல்லூரி அனைத்துத் துறை மாணவிகளுக்கும் இடையே ஜூலை 28 மற்றும் 29 ஆகிய இரு நாட்களும் BON FEST-2016 என்ற கலைவிழாப் போட்டிகள் நடைபெற்றது.

3. ஆடுவோமே! பள்ளு பாடுவோமே! 02.09.2016





நெகிழியைத் தவிர்ப்போம் தலைமுறையைக் காப்போம் என்ற மையப்பொருண்மையில் ஆடுவோமே பள்ளு பாடுவோமே என்ற கலைவிழா நடத்தப்பட்டது. சிறப்பு விருந்தினராக கும்கி பட புகழ் நடிகர், கவிஞர் ஜோ மல்லூரி அவர்கள் கலந்து கொண்டார். தஞ்சை தென்னக பண்பாட்டு மையத்தின் "நண்பர்கள் குழு"வின் செயலர் பொறியாளர் திரு.முத்துக்குமார் வாழ்த்துரை வழங்கினார். பத்துக்கும் மேற்பட்ட கல்லூரிகள் கலந்து கொண்ட இவ்விழாவில் ஒட்டுமொத்த கோப்பையை திருச்சி கலைக்காவேரி நுண்கலை கல்லூரி பெற்றது.

4. தமிழ் மன்றத்தேர்வு



மாணவிகளிடையே பொதுத்தமிழ் பாடத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையிலும் பல்கலைக்கழகத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற ஊக்குவிக்கும் வகையிலும் மன்றத்தேர்வு நடத்தப்படுகிறது. இத்தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவியருக்கு ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே கலைவிழாவில் பரிசுத்தொகை வழங்கப்படும்.

5. தமிழ்த்துறை சிறப்பு சொற்பொழிவு



07.02.2017 — தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மேனாள் இலக்கியத் துறைத்தலைவர் முனைவர் பெ.இராமலிங்கம் அவர்கள், "சங்ககாலப் பெண்களின் பழக்க வழக்கங்கள் மீட்டெடுப்பு" எனும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவாற்றினார்.

6. நூல் வெளியிடல்




12.09.2016 – அண்ணாமலை பல்கலைக்கழகம், மலாயா பல்கலைக்கழகம், சென்னை கலைஞன் பதிப்பகம் ஆகியன இணைந்து 12.09.2016 மற்றும் 13.09.2016 ஆகிய நாட்களில் சிதம்பரத்தில் நூல் வெளியீட்டு விழாவினை நடத்தியது. அதில் நூல் எழுதி வெளியிட்டவர்கள்:

1. முனைவர் க.ஆனந்தி — வீர நாராயணரின் மாலையும் எழுச்சியும்
2. முனைவர் மு.புஷ்பரெஜினா — சைவ சமயத்தில் தெய்வப்புலவர் சேக்கிழார்
3. முனைவர் இரா.ஜெயஸ்ரீ - பூமா வாசுகி
4. முனைவர் க. முத்தழகி — சீவகசிந்தாமணியில் திருத்தக்கதேவரின் ஆளுமை
5. முனைவர் சு.சத்தியா — புகழேந்திப்புலவர்
6. திருமதி இடமேனகா — வல்லம் தாஜுபால்

7. கருத்தரங்கங்கள் மற்றும் இதழ்கள்

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் 24 தேசிய மற்றும் பன்னாட்டுக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு கட்டுரை வழங்கினார்கள். காவ்யா, ஆய்த எழுத்து, செம்புலம், LFS, Research Tracks, IJCR போன்ற பன்னாட்டு இதழ்களிலும் ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர்.

8. பிற செயல்பாடுகள்








➢ திருவையாறு தமிழ்ப்பேரவை சார்பாக திருவையாற்றில் நடைபெறும் திங்கள் கூட்டத்தில் முனைவர் க.சத்தியா, முனைவர் இரா.ஜெயஸ்ரீ ஆகியோர் கலந்துகொண்டு கவிதைகள் வாசித்தும், சொற்பொழிவாற்றியும் சிறப்பித்துள்ளனர்.



➢ தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற "உலகத் தாய்மொழி நாள் விழா" நிகழ்ச்சியில் முனைவர் க. ஆனந்தி சிறப்பு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

➢ முத்தமிழ் முற்றம் சார்பாக சடையார் கோயில், பொன்னாப்பூர், காசவளநாடு புதூர் போன்ற ஊர்களில் நடைபெற்ற கவியரங்கங்கள், பட்டிமன்றங்கள், விழாக்களில் எம் துறைப் பேராசிரியர்கள் கலந்து கொண்டு கவிதைகள் வாசித்தும், சொற்பொழிவாற்றியும் சிறப்பித்துள்ளனர்.

9. விருதுகள்







04.01.2017 - சென்னை நுங்கம்பாக்கத்தில் நடைபெற்ற "வானதி விருது விழா-2016"இல் முனைவர் க.சத்தியா சிறந்த சிறுகதை ஆசிரியருக்கான விருதுபெற்றார்.



10.10.2016 திருவையாறு தமிழய்யா கல்விக்கழகம் சார்பில் 'ஔவைக்கோட்டத்தில்' நடைபெற்ற பாவேந்தர் பாரதிதாசன் தொடர்பாக நடைபெற்ற கவியரங்க விழாவிற்கு தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் சென்று கவிதை வாசித்தனர். இவ்விழாவில் ஔவைக்கோட்டத்தின் அறிஞர் பெருமக்கள் குழுவின் அமைச்சராக முனைவர் க.ஆனந்தி பொறுப்பேற்றார்.

10. நவநாள் ஜெபம்





பாள் செக்கர்ஸ் கல்விக் குழுமத்தின் அடித்தளமாம் அடைக்கல அன்னைக்கு ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதத்தில் நவநாள் ஜெபம் நடைபெறும். அவ்வாறு மனித மதிப்புகள் (HUMAN VALUES) என்ற தலைப்பில் அனைத்து துறை சார்பாக நவநாள் ஜெபம் மேற்கொள்ளப்பட்டது. தமிழ்த்துறை சார்பாக "மன்னிப்பு" என்ற கருத்தமைந்த நவநாள் ஜெபம் நடைபெற்றது.

11. பொங்கல் விழா



13.01.2017 அன்று தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

12. கல்லூரி மாணவியர் தேர்தல்





2016-2017ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் மன்றத்தேர்தல் 06.07.2016 அன்று நடைபெற்றது. கல்லூரி மாணவர் செயலர், துணை செயலர் உள்ளிட்ட ஒன்பது பதவிகளுக்கான தேர்தல் கணினித் துறையினரின் உதவியோடு மின்னணு முறையில் வாக்குப்பதிவு நடைபெற்றது.

13. பகுதி 1 பாடப்புத்தகம்





"நெகிழியைத் தவிர்ப்போம் தலைமுறையைக் காப்போம்" என்ற தலைப்பில் 2015-2016ஆம் கல்வியாண்டில் பல்வேறு செயல்பாடுகள் தமிழ்த்துறையில் நடத்தப்பெற்றது. எதிர்வரும் கல்வியாண்டில் நடத்தவிருக்கும் துறைச்செயல்பாடுகள் அனைத்தும் "தமிழர் கலை இலக்கிய மரபுகள்-மீட்டுருவாக்கம்" என்ற தலைப்பில் செயல்படுத்திடத் திட்டமிட்டுள்ளோம்.